**கல்வி அமைச்சு**

தொழில்நுட்பக் கல்வி மற்றும் பயிற்சித் திணைக்களம்

**பகுதி நேர விரிவுரையாளர்கள் /போதனாசிரியர்களாக வெளிவாரி வளவாளர்களைப் பதிவு செய்தல் - கல்வி ஆண்டு 2024**

இத்திணைக்களத்தின் கீழ் இயங்கும் தொழில்நுட்பவியல் /தொழில்நுட்பக் கல்லூரிகளுக்கான போதனாசிரியர் பதவிகளுக்கான வெளிவாரி வளவாளர்களைப் பதிவுசெய்வதற்காக இவ்வறிவித்தலின் இறுதியில் குறிப்பிட்டுக் காட்டப்பட்டுள்ள தொழில்நுட்பவியல் /தொழில்நுட்பக் கல்லூரிகளின் பணிப்பாளர் /அதிபர்களினால் விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

2. இந்த தொழில்நுட்பவியல் / தொழில்நுட்பக் கல்லூரிகளில் வெளிவாரி அடிப்படையில் விரிவுரைகளை மேற்கொள்ளவுள்ள பாடங்கள் பற்றிய விபரங்கள் மற்றும் விண்ணப்பப் படிவம் போன்றவற்றை தாம் கடமையாற்ற விரும்பும் தொழில்நுட்பவியல் /தொழில்நுட்பக் கல்லூரியின் பணிப்பாளர் /அதிபர் அவர்களிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம். இதனை தங்களது முகவரியிடப்பட்டு முத்திரை ஒட்டப்பட்ட (9″× 4″ அளவு நீளம் கொண்ட) கடித உறையினை அனுப்பி பெற்றுக் கொள்ளலாம். கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் “வெளிவாரி வளவாளர்” எனக் குறிப்பிடவும். அவ்வாறின்றேல் உரிய தொழில்நுட்பவியல் /தொழில்நுட்பக் கல்லூரிகளுக்கு வருகைதந்து இவ்விபரங்களைப் பெற்றுக் கொள்ளலாம்.

3. இத்தகைய விபரங்கள் அடங்கிய கையேட்டைப் பெற்றுக்கொள்ள முடியுமான இறுதித் திகதி 2023.12.01 ஆகும். ஒழுங்காகப் பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பப்படிவங்கள் பாரமெடுக்கப்படும் இறுதித்திகதி 2023.12.15 ஆகும்.

4. வெளிவாரி போதனாசிரியர்களாக பணியமர்த்தப்படுவதற்கு தேவையான கல்வி மற்றும் தொழில் முறை தகமைகள்:-

I. வெளிவாரி விரிவுரையாளர்கள் / போதனாசிரியர்களாக பொதுச் சேவை ஆணைக்குழுவின் அங்கீகரிக்கப்பட்ட சுற்றறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள தகுதிகளின் படி ஆட்சேர்ப்பு செய்யப்படும். அதன்படி அந்தந்த பாடப்பிரிவுகள் தொடர்பான அனைத்து விண்ணப்பதாரர்களும் விண்ணப்பங்களை ஏற்றுக் கொள்ளும் இறுதித் திகதிக்கு முன் குறித்த துறையில் அவர்களின் கல்வித் தகமைகளை முடித்த பிறகு, தொழில் முறை தகமைகள் அடைந்த / தொழில்நுட்பத் துறையில் பெற்றுள்ள தகைமைகள் மற்றும் குறித்த பாடங்களைக் கற்பித்தல் தொடர்பில் அல்லது குறித்த துறையில் செயலாற்றுதலில் உள்ள குறைந்தபட்ச அனுபவம் ஆகியவற்றைப் பற்றிய சகல விபரங்களும் பூர்த்தி செய்யயப்பட வேண்டும். சம்பந்தப்பட்ட தொழில் துறையில் குறைந்தது 05 ஆண்டுகள் நிறைவு பெற்றிருக்க வேண்டும்.

II. NVQ மட்டம் 3,4 பாடநெறிகளில் கற்பித்தல் அல்லது பயிற்சி வழங்கும் விண்ணப்பதாரர்கள் பூர்த்தி செய்ய வேண்டிய **கல்வி மற்றும் தொழில் முறை தகுதிகளாக**

(a) பாடப் பகுதியில் NCT அல்லது NVQ மட்டம் 5 அதற்கு இணையான (சமமான) தகமைகள் அல்லது சம்பந்தப்பட்ட தொடர்புடைய பாடத்தில் அரசாங்கத்தால் அங்கீகரிக்கப்பட்ட ஏதேனும் சான்றிதழ் அத்துடன் / தொடர்புடைய பாடத்தில் கற்பித்தல் /தொழிற் துறையில் குறைந்தபட்சம் 05 வருடம் அனுபவம்.

(b) பாடப் பகுதியில் NVQ - 6 மட்டம் சமமான தகுதியுடன் தொடர்புடைய பாடத்தில் குறைந்தபட்சம் 05 வருடம் கற்பித்தல்/தொழில் அனுபவம் (உதாரணம்:- HNDE/ NDT/ NDES சம்பந்தப்பட்ட துறையில் அரசாங்கத்தால் அங்கீகரிக்கப்பட வேறு தகைமைகள்)

(c) சம்பந்தப்பட்ட துறையில் பட்டதாரி /பட்டப்பின் டிப்ளோமா அல்லது தொடர்புடைய துறையில் அதற்கு சமமான தொழில் முறை தகுதி அத்துடன் தொடர்புடைய பாடத்தில் கற்பித்தல் /தொழிற் துறையில் குறைந்தபட்சம் 05 வருடம் அனுபவம்.

III. NVQ மட்டம் 5 பாடநெறிகளில் கற்பித்தல் அல்லது பயிற்சியை வழங்கும் விண்ணப்பதாரர்கள் பூர்த்தி செய்ய வேண்டிய **கல்வி மற்றும் தொழில் முறை தகுதிகளாக**

(a) NVQ பாடப் பகுதியில் மட்டம் 5 அத்துடன் சம்பந்தப்பட்ட தொடர்புடைய பாடத்தில் கற்பித்தல் அல்லது தொழில் துறையில் குறைந்தபட்சம் 05 வருடம் அனுபவம் அல்லது NCT உடன் 10வருட கற்பித்தல் /தொழில்துறையில் அனுபவம். மேலும் (முதலாவது செமிஸ்டர்/முதல் ஆண்டு மற்றும் இரண்டாம் செமிஸ்டர்/இரண்டாம் ஆண்டு மட்டும் கற்பித்தல் முடியும்)

(b) பாடப் பகுதியில் NVQ - 6 மட்டம் சமமான தகுதியுடன் தொடர்புடைய பாடத்தில் குறைந்தபட்சம் 05 வருடம் கற்பித்தல்/ தொழில் அனுபவம் (உதாரணம்: HNDE/ NDT/ NDES சம்பந்தப்பட்ட துறையில் அரசாங்கத்தால் அங்கீகரிக்கப்பட்ட வேறு தகைமைகள்)

(c) சம்பந்தப்பட்ட துறையில் பட்டதாரி/ பட்டப்பின் டிப்ளோமா அல்லது தொடர்புடைய துறையில் அதற்கு சமமான தொழில்துறை தகுதியுடன் தொடர்புடைய பாடத்தில் கற்பித்தல் / தொழிற் துறையில் குறைந்தபட்சம் 05 வருடம் அனுபவம்.

(d) சம்பந்தப்பட்ட துறையில் முதுமாணி பட்டம் அல்லது கலாநிதிப் பட்டம் அல்லது தொடர்புடைய துறையில் அதற்கு சமமான தொழில்துறையில் தகுதியுடன் தொடர்புடைய பாடத்தில் கற்பித்தல் / தொழிற் துறையில் குறைந்தபட்சம் 05 வருடம் அனுபவம்.

IV. NVQ மட்டம் 6 பாடநெறிகளில் கற்பித்தல் அல்லது பயிற்சியை வழங்கும் விண்ணப்பதாரர்கள் பூர்த்தி செய்ய வேண்டிய **கல்வி மற்றும் தொழில் முறை தகுதிகளாக**

(a) சம்பந்தப்பட்ட துறையில் பட்டதாரி/ பட்டப்பின் டிப்ளோமா அல்லது தொடர்புடைய துறைசார் தகைமை அத்துடன் தொடர்புடைய பாடத்தில் கற்பித்தல் / தொழிற் துறையில் குறைந்தபட்சம் 05 வருடம் அனுபவம்.

(b) சம்பந்தப்பட்ட துறையில் முதுமாணி பட்டம் அல்லது கலாநிதிப் பட்டம் அல்லது தொடர்புடைய துறையில் அதற்கு சமமான தொழில்துறையில் தகுதியுடன் கற்பித்தல் / தொழில் துறையில் குறைந்தபட்சம் 05 வருட அனுபவம்.

V. **விரிவுரையாளர்களுக்கான கொடுப்பனவு**
வெளிவாரி வளவாளர்களுக்கு செய்யப்படும் கொடுப்பனவு அவர்களது கல்வித் தகைமைகள் மற்றும் தொழில் முறை அனுபவங்கள் மற்றும் அவர்கள் கற்பிக்கும் பாடநெறிகளின் NVQ மட்டம் என்பவற்றிற்கமைய பணிப்பாளர் நாயகத்தின் வெளிவாரி போதனாசிரியர்கள் செலுத்தும் சுற்றறிக்கையின் அடிப்படையில் ஒரு மணித்தியாலத்திற்கு 400.00 முதல் 1000.00 ரூபா வரை வேறுபடும்.

VI. **விண்ணப்பங்கள் அனுப்பும் முறை**
அரசாங்க சேவையிலுள்ளவர்கள் தமது விண்ணப்பங்களை தத்தமது திணைக்களத் தலைவர்கள் ஊடாக அனுப்புதல் வேண்டும். தெரிவு செய்யப்படும் வெளிவாரி வளவாளரால் தங்களது வழமையான கடமைக்கு பாதிப்பு ஏற்படாது என்பதை திணைக்களத் தலைவர் ஊடாக உறுதிப்படுத்தல் வேண்டும்.

VII. **தெரிவு செய்தல்**:
வெளிவாரி வளவாளர்களாக தொழில்நுட்பவியல் / தொழில்நுட்பக் கல்லூரிப் பணிப்பாளரினால் / அதிபரினால் நேர்முகப்பரீட்சை ஒன்று நடாத்தப்பட்டு பதிவு செய்யப்படுவதற்காக தெரிவு செய்யப்படுவர். தெரிவு செய்யப்படும் போது உரிய பாடங்களைக் கற்பித்த அனுபவம் உள்ள விண்ணப்பதாரிகளுக்கு முன்னுரிமை வழங்கப்படும். தெரிவு செய்யப்பட்ட வெளிவாரி நியமனங்களை குறித்த கல்லூரிகளின் தேவைகளைக் கருத்திற் கொண்டு எழுத்து மூலம் உரிய காரணத்தை தெரிவித்து கல்லூரிப் பணிப்பாளரினார் / அதிபரினால் முடிவுறுத்த முடியும் என்பதைக் கவனத்தில் கொள்ள வேண்டும்.

VIII. வெளிவாரி வளவாளர்களாகப் பதிவு செய்யும் போதனாசிரியர்கள் தாங்கள் கற்பிக்கும் தொழில்நுட்பவியல்/ தொழில் நுட்பக் கல்லூரிகளின் உள் பரீட்சை நடவடிக்கைகளில் விசேட கட்டணம் செலுத்தாமல் பங்கேற்க வேண்டும். மேலும் ஆண்டு இறுதி செமிஸ்டர் பரீட்சைகளுக்குத் தேவைப்படும் போது பரீட்சைகளில் கலந்து கொள்ள வேண்டும் வினாத் தாள்களை மதிப்பிடுவதற்கும் ஆதரவு வழங்கப்பட வேண்டும்.

5. இந்தப் பதிவு நடவடிக்கையானது, 2024 ஆம் கல்வி ஆண்டிற்கு மட்டுமே உரியதாகும் என்பதுடன், எந்தவொரு நிரந்தரப் பதவியைப் பெற்றுக்கொள்வதற்கும் உரித்துடையதல்ல.

6. விண்ணப்பங்களை அனுப்புகின்ற போது ஒரு பாடத்திற்கு மேல் விண்ணப்பிப்பதாக இருப்பின், ஒவ்வொரு பாடத்திற்கும் தனித்தனி விண்ணப்பங்களை அனுப்புதல் வேண்டும். விண்ணப்பப்படிவங்கள் பூர்த்தி செய்யப்பட்டு முடிவுத் திகதிக்கு முன்னர் கிடைக்கக் கூடியதாக பதிவுத் தபாலில் தொழில்நுட்பவியல் / தொழில்நுட்பக் கல்லூரிப் பணிப்பாளருக்கு / அதிபருக்கு அனுப்புதல் வேண்டும்.

7. சிங்களம், ஆங்கிலம் மற்றும் தமிழ் வர்த்தமானிகளுக்கு இடையிலான வேறுபாடு இருந்தால் சிங்கள வர்த்தமானி கவனத்தில் கொள்ளப்படுகின்றது.

எஸ். சி. ஜகத்,
பணிப்பாளர் நாயகம்,
தொழில்நுட்பக் கல்வி மற்றும் பயிற்சித் திணைக்களம்.

த.பெ.இல. 557,
ஒல்கொட் மாவத்தை,
கொழும்பு 10.
www.dtet.gov.lk

## தொழில் நுட்பவியல் கல்லூரிகளின் /தொழில்நுட்பக் கல்லூரிகளின் பெயர்ப் பட்டியல்

| தொ. இல. | தொழில்நுட்பவியல் கல்லூரிகள் / தொழில்நுட்பக் கல்லூரிகள் | விலாசம் | மாவட்டம் |
|---|---|---|---|
| 01. | இலங்கை தொழில் நுட்பவியல் கல்லூரி | ஒல்கொட் மாவத்தை, கொழும்பு - 10 | கொழும்பு |
| 02. | காலி தொழில் நுட்பவியல் கல்லூரி | களுவெல்ல, காலி | காலி |
| 03. | கண்டி தொழில் நுட்பவியல் கல்லூரி | அறுப்பொல, கண்டி | கண்டி |
| 04. | யாழ்ப்பாணம் தொழில் நுட்பவியல் கல்லூரி | பிறவுண்வீதி, யாழ்ப்பாணம் | யாழ்ப்பாணம் |
| 05. | பதுளை தொழில் நுட்பவியல் கல்லூரி | கிறீன்லண்ட்டிரைவ், பதுளை | பதுளை |
| 06. | அனுராதபுரம் தொழில் நுட்பவியல் கல்லூரி | புதிய நகரம், அனுராதபுரம் | அநுராதபுரம் |
| 07. | குருநாகல் தொழில் நுட்பவியல் கல்லூரி | புத்தளம் வீதி, குருநாகல் | குருநாகல் |
| 08. | அம்பாறை ஹாடி தொழில் நுட்பவியல் கல்லூரி | இங்கினியாகல வீதி, அம்பாறை | அம்பாறை |
| 09. | இரத்தினபுரி தொழில் நுட்பவியல் கல்லூரி | பாம் தோட்டம், கொழும்பு வீதி, இரத்தினபுரி | இரத்தினபுரி |
| 10. | கேகாலை தொழில் நுட்பக் கல்லூரி | கச்சேரி வீதி, கேகாலை | கேகாலை |
| 11. | இரத்மலானை தொழில் நுட்பக் கல்லூரி | காலி வீதி இரத்மலானை | கொழும்பு |
| 12. | மாத்தறை தொழில் நுட்பக் கல்லூரி | மெத்தவத்தை, மாத்தறை | மாத்தறை |
| 13. | சம்மாந்துறை தொழில் நுட்பக் கல்லூரி | அம்பாறைவீதி, சம்மாந்துறை | அம்பாறை |
| 14. | களுத்துறை தொழில் நுட்பக் கல்லூரி | கலமுல்லை, களுத்துறை | களுத்துறை |
| 15. | வறக்காப்பொலை தொழில் நுட்பக் கல்லூரி | அங்குறுவல்ல வீதி, வறக்காப்பொல | கேகாலை |
| 16. | குளியாப்பிட்டி தொழில் நுட்பக் கல்லூரி | பன்னலவீதி, குளியாப்பிட்டி | குருநாகல் |
| 17. | பாத்ததும்பறை தொழில் நுட்பக் கல்லூரி | நவயாலதென்ன, கடுகஸ்தொட்ட | கண்டி |
| 18. | நுவரெலியா தொழில் நுட்பக் கல்லூரி | ஜயதிலக்க மாவத்தை, நுவரெலியா | நுவரெலியா |
| 19. | ஹோமாகம தொழில் நுட்பக் கல்லூரி | கொடகம, ஹோமாகம | கொழும்பு |
| 20. | பெலியத்தை தொழில் நுட்பக் கல்லூரி | புவக்தண்டவ, பெலியத்தை | ஹம்பாந்தோட்டை |
| 21. | ஹசலக தொழில் நுட்பக் கல்லூரி | யோத எல வீதி, ஹசலக | கண்டி |
| 22. | தம்புள்ளை தொழில் நுட்பக் கல்லூரி | மாத்தளை வீதி, தம்புள்ளை | மாத்தளை |
| 23. | பலப்பிட்டிய தொழில் நுட்பக் கல்லூரி | வந்ததுவ புகையிரத நிலைய வீதி, பலப்பிட்டி | காலி |
| 24. | வாரியப்பொலை தொழில் நுட்பக் கல்லூரி | சிலாபம் வீதி, வாரியப்பொலை | குருநாகல் |
| 25. | மட்டக்களப்பு தொழில் நுட்பக் கல்லூரி | மஞ்சந்தொடுவாய், மட்டக்களப்பு | மட்டக்களப்பு |
| 26. | பண்டாரவளை தொழில் நுட்பக் கல்லூரி | வேவதென்ன, பண்டாரவளை | பதுளை |
| 27. | மொனராகலை தொழில் நுட்பக் கல்லூரி | சிறிகல, மொனராகலை | மொணராகலை |
| 28. | கம்பஹா தொழில் நுட்பக் கல்லூரி | வெரலவத்தை, யக்கலை | கம்பஹா |
| 29. | திருகோணமலை தொழில் நுட்பக் கல்லூரி | மிஹிந்தபுரம், திருகோணமலை | திருகோணமலை |
| 30. | தெஹியத்தகண்டி தொழில் நுட்பக் கல்லூரி | மஹாவானவெல, தெஹியத்தகண்டி | அம்பாறை |
| 31. | மாத்தளை தொழில் நுட்பக் கல்லூரி | எம்.சீ. வீதி, மாத்தளை | மாத்தளை |
| 32. | வீரவிலை தொழில் நுட்பக் கல்லூரி | புதிய நகரம், வீரவிலை | ஹம்பாந்தோட்டை |
| 33. | மெதகம தொழில் நுட்பக் கல்லூரி | மெதகம | மொணராகலை |
| 34. | பொலன்னறுவை தொழில் நுட்பக் கல்லூரி | வித்தியாபுரம், பொலன்னறுவை | பொலன்னறுவை |
| 35. | எம்பிலிப்பிட்டி தொழில் நுட்பக் கல்லூரி | புதிய நகரம், எம்பிலிப்பிட்டி | இரத்தினபுரி |
| 36. | வவுனியா தொழில் நுட்பக் கல்லூரி | மன்னார் வீதி, வவுனியா | வவுனியா |

| தொ. இல. | தொழில்நுட்பவியல் கல்லூரிகள் / தொழில்நுட்பக் கல்லூரிகள் | விலாசம் | மாவட்டம் |
|---|---|---|---|
| 37. | அக்கரைப்பற்று தொழில் நுட்பக் கல்லூரி | பிரதான வீதி, அக்கரைப்பற்று | அம்பாறை |
| 38. | ஆணமடு தொழில் நுட்பக் கல்லூரி | கம்முதாபூமி, தம்மன்னகம, ஆணமடுவ | புத்தளம் |
| 39. | மன்னார் தொழில் நுட்பக்கல்லூரி | பன்னாய், வெட்டுவன் சந்தி, மடுவீதி, மன்னார் | மன்னார் |